വ്യവസായം, ഇനി ഗവണ്മെൻറ ധനസഹായം ചെയ്യാതെ നടക്കുകയുള്ളു എന്ന പറയുന്നതിൽ എന്തുപരമാർത്ഥമുണ്ടെന്നകൂടി ആലോചിക്കേണ്ടതാണ്. ഇങ്ങനെയെല്ലാമാണെങ്കിലും സഹകരണ അടിസ്ഥാനത്തിൽ ഈ പ്രസ്ഥാനം മുന്നോട്ട പോകുകയാണെന്ന കാണുന്നപക്ഷം ഗവണ്മെൻറിൽനിന്നും വേണ്ടത്ര ധനസഹായം ഉണ്ടാവുകയും ചെയ്യും.

ശ്രീ. എം. ഐ. പോൾ : എത്രകാലത്തിനകം ഈ പദ്ധതി നടപ്പിൽ വരുത്താമെന്നാണ് മന്ത്രി പ്രതീക്ഷിക്കുന്നത്?

ബഹു. ശ്രീ. എൻ. കുഞ്ഞുരാമൻ: അധികം കാലതാമസം ഉണ്ടാവുകയില്ല. ഈ പദ്ധതിയുടെ വിശദാംശത്തിലേക്ക് ഗവണ്മെൻറ് ഇതേവരെ പ്രവേശിച്ചിട്ടില്ലെന്ന ഞാൻ പറഞ്ഞുകഴിഞ്ഞു.

ശ്രീ. എം. ഐ. പോൾ : ഈ സ്കീം തയ്യാറായതിനു ശേഷം അതു നടപ്പിൽ വരുന്നതിനുമുമ്പ് ഇപ്പോഴത്തെ മന്ത്രി ആ സ്ഥാനത്തുനിന്നും മാറുന്നപക്ഷം പിന്നെവരുന്ന മന്ത്രി ഈ പദ്ധതി നടപ്പിൽ വരുത്തുമെന്ന് ഉറപ്പ് പറയാമോ?

Mr. Deputy Speaker: It is only an hypothetical question and cannot be allowed.

ശ്രീ. യു. കെ. വാസുദേവനാശാരി : മിഡിൽമെൻ ഉണ്ടെല്ലോ. അവരെക്കൂടി ഈ കോവാപ്പറേറീവ് സൊസൈറ്റിയിൽ ഉൾപ്പെടുത്തുമോ?

ബഹു. ശ്രീ. എൻ. കുഞ്ഞുരാമൻ : അതു ആവശ്യമാണെന്നു തോന്നുന്നില്ല. വേണമെന്നുണ്ടെങ്കിൽ അതിനും വ്യവസ്ഥ ചെയ്യാവുന്നതാണ്.

ഈ ഘട്ടത്തിൽ ഒരു കാര്യംകൂടി പറയാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. മിഡിൽമെന്നിനെ എലിമെനേറ്റചെയ്യുവാനാണ് ഇപ്പോൾ ആലോചിക്കുന്നത്. അതു നടപ്പിൽവരുന്നപക്ഷം ഇതിലേക്ക് ഒരു സെസ്സ് ഏർപ്പെടുത്തുവാനും വിചാരിക്കുന്നു. അതിലാക്കും വിഷമം ഉണ്ടാകുകയില്ലെന്നു വിചാരിക്കുന്നു. മിഡിൽമെൻ ഇല്ലാതെവരുന്നപക്ഷം ഫാ ൦, ഫാ ൫ രൂപ ലാഭം ഉണ്ടാകും. അതിൽനിന്നും നാലോ അഞ്ചോ രൂപ സെസ്സ് കൊടുക്കുന്നതിൽ ആർക്കും വിരോധം ഉണ്ടാവുകയില്ല. ഈ മിഡിൽമെന്നിനെ പലവിധത്തിൽ ഉപയോഗപ്പെടുത്താൻകൂടി ഗവണ്മെൻറ് ആലോചിക്കുന്നുണ്ട്.

ശ്രീ. പി. നാണു : സെയിൽസ് ടാക്സിൽനിന്നും കയറുവ്യവസായത്തെ ഒഴിവാക്കുന്ന കാര്യത്തെപ്പറ്റി ഗവണ്മെൻറ് ആലോചിക്കുന്നുണ്ടോ?

ബഹു. ശ്രീ. എൻ. കുഞ്ഞുരാമൻ : അതിനു വലിയ അർത്ഥമുണ്ടെന്നു തോന്നുന്നില്ല. ഇപ്പോൾതന്നെ അതിന്റെ എക്സ്പോർട്ട് ഡ്യൂട്ടി എടുത്തുകളഞ്ഞു. അങ്ങിനെ ഗവണ്മെൻറ വലിയ ഒരു വരവു നഷ്ടപ്പെട്ടിരിക്കുകയാണ്. ഇപ്പോൾ രണ്ടുസ്ഥാനത്തുനിന്നും സെയിൽസ് ടാക്സ് ഈടാക്കിവരുന്നതു മാറ്റി ഒരു സ്ഥാനത്തുനിന്നു മാത്രം സെയിൽസ് ടാക്സ് ഈടാക്കുന്നതിനെപ്പറ്റി ആലോചിച്ചുവരികയാണ്. അല്ലാതെ സെയിൽസ് ടാക്സിൽനിന്നും ഈ വ്യവസായത്തെ നിശ്ശേഷം ഒഴിവാക്കേണ്ട ആവശ്യമുണ്ടെന്നു ഗവണ്മെൻറ് വിചാരിക്കുന്നില്ല.

ശ്രീ. എ. പി. ഉദയഭാനു : മുമ്പു മന്ത്രി അവർകൾ വിരോവനം ചെയ്ത കുറഞ്ഞകൂലി മുക്കാൽരൂപ എന്നു പറഞ്ഞല്ലോ. അതിൽ കുറയാത്തകൂലി കിട്ടണമെന്ന ഉദ്ദേശത്തോടുകൂടിയാണോ പദ്ധതി തയ്യാറാക്കുന്നത്.

ബഹു. ശ്രീ. എൻ. കുഞ്ഞുരാമൻ : എന്നാണ് ഗവണ്മെൻറിന്റെ ആഗ്രഹം. അതേപ്പറ്റി ഖണ്ഡിതമായി പറയാൻ ഇപ്പോൾ നിവർത്തിയില്ല. പദ്ധതിയുടെ വിശദാംശത്തിൽ കടന്നതിനുശേഷമേ അക്കാര്യം തീർച്ചപ്പെടുത്താവൂ.

ശ്രീ. ഇ. കെ. മാധവൻ : സെസ്സ് ഈടാക്കണമെന്നു പറഞ്ഞല്ലോ? എന്തിൽ നിന്നാണ് സെസ്സ് ഈടാക്കുന്നത്?

ബഹു. ശ്രീ. എൻ. കുഞ്ഞുരാമൻ : കയറിൽനിന്നും.

ശ്രീ. അബ്ദുൽ മജീദ് : സർ, ഗവണ്മെൻറ ഭാഗത്തുനിന്നും എന്റെ പ്രമേയത്തിലെ തത്വം സ്വീകരിച്ചിരിക്കുന്നതുകൊണ്ട് ഞാൻ ഈ പ്രമേയം പിൻവലിക്കുന്നു.

The resolution was, by leave, withdrawn

Resolution regarding merging of Anjengo, Thangasseri and Fort Cochin in the United State

സാഹിബ് ബഹദൂർ മുഹമ്മദ് മുസ്തഫാ : ഞാൻ സഭ മുമ്പാകെ അവതരിപ്പിക്കാൻ ഉദ്ദേശിക്കുന്ന പ്രമേയം ഇതാണ്.

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sahib Bahadur A. Mohammed Mustaffa]

"തിരുവിതാംകൂർ കൊച്ചി ഐക്യസംസ്ഥാനത്തിനുള്ളിൽ കിടക്കുന്നതും മദ്രാസ് പ്രവിശ്യയുടെ ഭാഗങ്ങളുമായ തങ്കശ്ശേരി, അഞ്ചുതെങ്ങ് ഫോർട്ടുകൊച്ചി ഈ സ്ഥലങ്ങളും ഐക്യസംസ്ഥാനത്തോടുകൂട്ടിച്ചേർക്കുന്നതിനു നിയമാനുസൃതം വിട്ടുകിട്ടുന്നതിനാവശ്യമായ നടപടികളും ഉടനടി സ്വീകരിക്കണമെന്ന് ഈ സഭ ഗവൺമെൻറിനോടു ആവശ്യപ്പെടുന്നു."

ഈ പ്രമേയത്തെ സംബന്ധിച്ചു ഒരു വലിയ പ്രസംഗത്തിൻെറ ആവശ്യമുണ്ടെന്നു ഞാൻ വിചാരിക്കുന്നില്ല. ഇതിൽ പറയുന്ന കാര്യങ്ങളും ബാഹ്യ. അംഗങ്ങൾക്കെല്ലാവർക്കും ബോദ്ധ്യമുള്ളതാണെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു. ഈ ഐക്യസംസ്ഥാനത്തു ചെറിയ ചെറിയ ചില പാക്കറവരാജ്യങ്ങൾ കിടക്കുന്നതു് പല പ്രകാരത്തിലും ഈ രാജ്യത്തിൻെറ അഭിവൃദ്ധിക്കും ഐശ്വര്യത്തിനും പ്രതിബന്ധമായി നിൽക്കുന്നുണ്ടെന്നു് ഞാൻ പറയാതെ തന്നെ എല്ലാവർക്കും അറിവുള്ളതാണു്. ഇതേ സംബന്ധിച്ചു് അടുത്തകാലത്തുതന്നെ കേന്ദ്രഗവൺമെൻറും മറ്റു ബന്ധപ്പെട്ട ഗവൺമെൻറുകളും ചില ആലോചനകളും അന്വേഷണങ്ങളും നടപടികളും ആരംഭിച്ചിട്ടുണ്ടു്. ഇങ്ങനെയുള്ള ചെറിയ ചെറിയ പാക്കറവപ്രദേശങ്ങളും സംസ്ഥാനത്തിൻെറ മദ്ധ്യേ കിടക്കുന്നതു് ഈ രാജ്യത്തിൻെറ ശാശ്വതമായ സമാധാനത്തിനു തന്നെ ഒരു ഭീഷണിയായി തീർന്നിട്ടുണ്ടു്. അക്രമപ്രവർത്തനമായ പല പ്രസ്ഥാനങ്ങളും ഈ രാജ്യത്തു നടമാടിക്കൊണ്ടിരിക്കുന്ന ഇക്കാലത്തു അത്തരം പ്രവർത്തനങ്ങളെ നിരോധിക്കുന്നതിനുതന്നെ ഈ സ്ഥലങ്ങളും ഒരു പ്രതിബന്ധമാണു്. ഈ സ്ഥലങ്ങളും അക്രമപ്രസ്ഥാനക്കാരുടെ ഒരു സങ്കേതവും അഭയകേന്ദ്രവുമായി ഉപയോഗിക്കപ്പെട്ടുവരുന്നുണ്ടു്. ഇങ്ങനെയുള്ള ഗുരുതരമായ കാര്യങ്ങളെപ്പറ്റി ആലോചിക്കുമ്പോൾ ഈ ചെറിയ ചെറിയ പാക്കറവപ്രദേശങ്ങൾ ഇല്ലായ്മചെയ്യേണ്ടതു് ഏറ്റവും ആവശ്യമാണെന്നു് ആരും സമ്മതിക്കാതിരിക്കയില്ല. എന്നു മാത്രമല്ല, ആ സ്ഥലങ്ങളെ ഐക്യസംസ്ഥാനത്തോടു ചേർക്കുന്നതു് ആ സ്ഥലങ്ങളുടേയും അവിടെയുള്ള ആളുകളുടേയും സാമ്പത്തികവും, സാമൂഹ്യവും, ഭരണപരവുമായ പുരോഗതിക്കും അത്യന്താപേക്ഷിതമാണു്. ഞാൻ നേരത്തെ പറഞ്ഞതുപോലെ ഇപ്പോൾതന്നെ അവയെല്ലാം ഐക്യസംസ്ഥാനത്തോടു ചേർത്തു് ഏകീകരിക്കുന്നതിനു കേന്ദ്രഗവൺമെൻറും ബന്ധപ്പെട്ട മറ്റു ഗവൺമെൻറുകളും ചില ആലോചനകളും നടത്തിവരുന്നുണ്ടെങ്കിലും കാര്യനടപ്പിനു പ്രതിബന്ധമായി ചില ആളുകളും സ്വാധീനം ചെലുത്തി [അവിടങ്ങളിലെ ജനങ്ങളുടെ അഭിപ്രായം അതിനെതിരാണെന്നുവരുത്താൻ ശ്രമം ചെയ്യുവരുന്നുണ്ടെന്നു പത്രങ്ങളിൽനിന്നും മനസ്സിലാക്കാൻ സാധിക്കും. അതിനാൽ ഇതു സംബന്ധമായി ആവശ്യമായ നടപടികളും ഗവൺമെൻറു കൈക്കൊള്ളേണ്ടതു് അത്യാവശ്യമായിത്തീർന്നിരിക്കുന്നു. ഇതിൽ കൂടുതൽ ഭീർഘമായ ഒരു പ്രസംഗം ഈ പ്രമേയത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം ആവശ്യമാണെന്നു തോന്നുന്നില്ല. ഈ പ്രമേയം സഭ സ്വീകരിക്കണമെന്നു് അപേക്ഷിക്കുന്നു.

ശ്രീ. പി. നാണു: സർ, ഞാൻ ഈ പ്രമേയത്തെ പിന്താങ്ങുന്നു. ഒരു കാലത്തു നമ്മുടെ രാജ്യത്തു് ഉൾപ്പെട്ടിരുന്ന സ്ഥലങ്ങളാണു് ഈ അഞ്ചുതെങ്ങും, തങ്കച്ചേരിയും, ഫോർട്ടുകൊച്ചിയും. ചരിത്രപരമായ കാരണങ്ങളാൽ ഈ മൂന്നുസ്ഥലങ്ങളും ആദ്യം ഈസ്റ്റ് ഇൻഡ്യാ കമ്പനിക്കു് കിട്ടുകയും, പിന്നീടു് ബ്രിട്ടീഷു് ഗവൺമെൻറിൻെറയും, ഇപ്പോൾ ഇൻഡ്യാ ഗവൺമെൻറിൻേറയും കൈവശത്തിലായിത്തീരുകയുമാണു് ചെയ്തിട്ടുള്ളതു്. ഈ സ്ഥലങ്ങളുടെ സ്ഥിതി എന്താണെന്നു നാം ആലോചിച്ചു് നോക്കേണ്ടതാണു്. അഞ്ചുതെങ്ങിലെ കാര്യങ്ങൾ എനിക്കു കുറെ നേരിട്ടു് എനിക്കറിവുണ്ടു്. ആ സ്ഥലം മുമ്പു് ആറ്റിങ്ങൽ റാണി മഹാരാജാവിൻെറ വകയായിരുന്നു. പിന്നീടു് അതു് ഈസ്റ്റ് ഇൻഡ്യാ കമ്പനിക്കു് കൊടുക്കുകയാണു് ചെയ്തിട്ടുള്ളതു്.

ശ്രീ. ആർ. കെ. രാമ: *திருவிதாங்கூர் ராஜ்யம், கேரளக்கரை யார் கையில் இருந்தது?*

ശ്രീ. പി. നാണു: കേരളക്കര പണ്ടു് നമ്പൂതിരിമാരുടെ വകയായിരുന്നു എന്നാണു് ചരിത്രത്തിൽനിന്നും ഞാൻ മനസ്സിലാക്കിയിട്ടുള്ളതു്.

അഞ്ചുതെങ്ങിലാണെങ്കിൽ കേരോൽപ്പന്നങ്ങളല്ലാതെ ജനങ്ങളുടെ നിത്യാവശ്യത്തിനുള്ള യാതൊരു സാധനങ്ങളുമില്ല. ഈ ഐക്യസംസ്ഥാനത്തിലെ സമീപപ്രദേശങ്ങളിൽനിന്നുവേണം അവിടത്തെ ജനങ്ങളുടെ ആവശ്യങ്ങൾ നിർവ്വഹിക്കുവാൻ. റേഷൻ ഏർപ്പെടുത്തിയതു മുതൽക്കു് റേഷൻസാമാനങ്ങളും മാത്രം അവർക്കു് ഇൻഡ്യാ ഗവൺമെൻറു കൊടുക്ക

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

ന്നണ്ട്. മറ്റെല്ലാസാധനങ്ങളും അവർ വാങ്ങുന്നതു് നമ്മുടെ ഐക്യസംസ്ഥാനത്തുനിന്നുമാണു്. എക്സ്സൈസ്സു് നിയമങ്ങളും മറ്റു നിയമങ്ങളുംകൊണ്ടു് അവയെല്ലാം അവർക്കു സൗകര്യത്തിനു കിട്ടാനും പ്രയാസമായിരിക്കുന്നു. ഒരു ഔദ്യോഗികലക്ഷ്യംമാത്രം നമ്മെ അപേക്ഷിച്ചു് അവർക്കു് ഉണ്ടെന്നു പറയുന്നുണ്ടു്. അതായതു് അവർക്കു നിർബന്ധമായ റേഷൻസാധനങ്ങൾ ഇവിടെ കിട്ടുന്നതിനെക്കാൾ വളരെ മെച്ചമാണെന്നാണു് പറയുന്നതു്. മറ്റെല്ലാ കാര്യത്തിലും അവർ വളരെ വിഷമിക്കുന്നുണ്ടു്. ഒരു വ്യവഹാരം കൊടുക്കണമെങ്കിൽ തിരുനൽവേലിയിലോ മദ്രാസിലോ പോകേണ്ടിയിരിക്കുന്നു. ഹൈസ്കൂൾ വിദ്യാഭ്യാസം വേണമെന്നുണ്ടെങ്കിൽ അതിനു് ഐക്യസംസ്ഥാനത്തെ ആശ്രയിക്കേണ്ടിയിരിക്കുന്നു. വൈദ്യസംബന്ധമായ ആവശ്യങ്ങൾക്കും അതുപോലെതന്നെ. ഇങ്ങനെ പല കാര്യങ്ങളിലും ഈ ഐക്യസംസ്ഥാനത്തിന്റെ സഹായത്തോടുകൂടിയല്ലാതെ അവിടത്തെ ജനവിഭാഗത്തിനു ജീവിക്കാൻ സാധ്യമല്ല. അതുകൊണ്ടു് അവിടത്തെ ജനങ്ങളുടെ നന്മയെ കരുതിതന്നെ ആ സ്ഥലങ്ങളും ഈ രാജ്യത്തോടു ചേർക്കേണ്ടതാണു്. അതുകൂടാതെ ഞാൻ നേരത്തെ പറഞ്ഞപോലെ ഈ മൂന്നു സ്ഥലങ്ങളും മുമ്പു നമ്മുടെ രാജ്യത്തു് ഉൾപ്പെട്ടിരുന്നവയാണെന്നും അവിടത്തെ ജനങ്ങളും നമ്മുടെ സഹോദരങ്ങളാണെന്നുമുള്ള വസ്തുതയെയും പരിഗണിച്ചു് അവയെ നമ്മുടെ സംസ്ഥാനത്തോടു ചേർക്കുന്നതിനു വേണ്ട നടപടികളും കൈക്കൊള്ളേണ്ടതു അത്യാവശ്യമാണു്. ഇതിനകം നമ്മുടെ ഗവൺമെൻറു് എന്തെല്ലാം നടപടികളാണു് കൈക്കൊണ്ടിട്ടുള്ളതെന്നു് എനിക്കു നിശ്ചയമില്ല. അതു് ഏതാണ്ടു് സാധിതപ്രായമായിട്ടുണ്ടെന്നു് മുമ്പൊരു ദിവസം ഇവിടെ പറയുകയുണ്ടായി. അതു സാധിതപ്രായമായിട്ടുണ്ടെങ്കിൽ ഞാൻ വളരെ സന്തോഷിക്കുന്നു. അതായിട്ടില്ലെങ്കിൽ അതിനുവേണ്ടി ഗവൺമെൻറു് ഉടനെ വേണ്ട നടപടികളും സ്വീകരിക്കണമെന്നു് അപേക്ഷിച്ചുകൊണ്ടു് ഞാൻ ഈ പ്രമേയത്തെ പിന്താങ്ങുന്നു.

ശ്രീ. ഏ. സിതമ്പരനാഥ നാടാർ: സർ, ഞാൻ ഇന്ത പിരമേയത്തൈ എതിർക്കിറേൻ. അൻപർ നാഞ്ചു അവർകൾ എതോ അഞ്ചുതെങ്കു, ആറ്റിങ്കൽ റാണി അവർകളിൻ കൈയിൽ ഇരുന്തതാകവും അഞ്ചുതെങ്കിൽ ഇരുക്കക് കൂടിയ വിദ്യിയാർത്തികൾ തിരുവനന്തപുരത്തിൽ പടിക്കിറതാകവും ഇന്നും ഇതു പോൻറ ചില കാരണങ്കളാൽ അതു ഇന്ത കൊച്ചി തിരുവിതാങ്കൂർ ഐക്യ സമസ്താനത്തോടു ചേരപ്പടവേണ്ടുമെൻറു അവർകൾ സൊന്നാർകൾ. നാൻ അവർകളിടത്തിൽ കേട്കിറേൻ, ഇൻറു കൊച്ചി തിരുവിതാങ്കൂരിൽ ഇരുക്കക്കൂടിയ, എൻനൈപ് പോൻറ ചില ഇളം സിനാർകൾ വെളിനാടുകളുക്കു, പംപായ് വരൈ പടിക്കപ് പോകിറവർകൾ ഇല്ലൈയാ? യെൻറു കേട്കിറേൻ. അവർകൾ ഇങ്കിരുന്തു അങ്കേ പടിക്കപ് പോന തിനാൽ പംപായൈയും ഇന്ത ഐക്യ സമസ്താനത്തോടു ചേർത്തു വിടവേണ്ടാമായെൻറു കേട്കിറേൻ. അതു മാത്തിരമല്ല. സരിത്തിര പൂർവമാക വേറു ചില ഇടങ്കളിൽ, ഇക് കേരളപ് പിരതേശം ചില നമ്പൂതിരികൾ കൈയിൽ ഇരുന്തതാക സൊന്നാർകൾ. എനക്കും സരിത്തിരം തെരിയും. ടി. കെ. നാരായണപിള്ളൈ അവർകൾ വരക്കൂടിയ പരൂർ യാർ കൈയിൽ ഇരുന്തതെൻറുമ്, ആലങ്കാടു യാർ കൈയിൽ ഇരുന്തതെൻറുമ്, കൊല്ലം യാർ കൈയിൽ ഇരുന്തതെൻറുമ്, ആറ്റിങ്കൽ യാർ കൈയിൽ ഇരുന്തതെൻറുമ്, നാങ്കൾ വരുമ് നാളിൽ നാടു യാർ കൈയിൽ ഇരുന്തതെൻറുമ്, പുറത്തായ നാടു യാർ കൈയിൽ ഇരുന്തെൻപതൈയും നാങ്കൾ അറിവോമ്. നീങ്കൾ കൊണ്ടുവന്ത തീർമാനമ് ഇന്ത ഇടത്തിൽ എവ്വളവു പൊരുത്തമാനതു എൻറു കേട്കിറേൻ. എനതു അഭിപ്പിരായത്തിൽ അതു അവ്വളവാക പൊരുത്തമാനതല്ല. പെരുമ്പാൻമൈയിനർ കക്ഷിയിൻ പെയരാൽ ഒരു വേളൈ നീങ്കൾ ഇന്ത തീർമാനത്തൈ പാസാക്കി വിട്ടാലുമ് നാൻ സൊൽകിറേൻ ഒരു നാളുമ് നീങ്കൾ അതൈ ആളപ്പോകിറതില്ലൈ. അതർകു ഇരണ്ടു കാരണങ്കളുണ്ടു. അഞ്ചുതെങ്കുമ്, Fort Cochin–മ് ഇൻറു മതരാസ് സർക്കാരിൻ കീഴ് ഇരുക്കിറതു. അവർകളിൻ സമ്മതത്തൈ പെറ്റാലുമ് അതോടു നിർകാതു. അടുത്തപടിയാക നീങ്കൾ കട്ടിച് സോറു കട്ടിക്കൊണ്ടു ടെൽലിക്കുച് സെല്ലവേണ്ടുമ്, മതരാസ് സർക്കാർ സമ്മതിത്തായ് വിട്ടതു, ഉങ്കളതു തലൈവേണ്ടുമെൻറു. തങ്കച്ചേരിയിലുമ്, അഞ്ചുതെങ്കിലുമ് ഉള്ള മക്കൾ തിരുവിതാങ്കൂർ കൊച്ചി ഐക്യ സമസ്താനത്തോടു വരവേണ്ടാമെൻറു സൊൽവതു മെമ്പർക്കുത് തെരിയുമാ?

ശ്രീ. അബ്ദുൽ മജീദ്: അതു് അബദ്ധമല്ലേ?

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

ஸ்ரீ. ஏ. சிதம்பரநாத நாடார்: மெம்பர் அதை அபத்தமென்று நினைத்தால் அப்படியே இருக்கட்டும். எனக்குத் தெரியும், நான் சொல்வது அபத்தமல்ல வென்று. ஒரு வேளை இன்று திருவிதாங்கூர் கொச்சி ஐக்ய சமஸ்தானத்தின் உள்ளில் இருக்கும் அஞ்சுதெங்கும், Fort Cochin–ம் மதராஸ் மாகாணத்தின் கீழ் இருப்பதினால் அவைகளை இந்த ஐக்ய சமஸ்தானத்தோடு சேர்த்து விட வேண்டுமென்று சொல் வது, நல்ல மனப்பான்மை என்று வைத்துக் கொண்டாலும் இதைப்போல் திருவிதாங் கூரை ஒட்டிக் கிடக்கக் கூடிய சில இடங்கள் சென்னை ராஜதானிக்குள்ளும் கிடக் கிறது. அதையும் பிரித்து விடவேண்டுமென்ற மனப்பான்மை இருந்தால் நாங்கள் ஒருவேளை இதை ஒப்புக் கொள்ளலாம். அந்த மனப்பான்மை உங்களுக்கு இருக் கின்றதா? என்று கேட்கிறேன். உங்கள் நடவடிக்கைகளிலிருந்தும், உங்கள் பேச் சிலிருந்தும் நீங்கள் ஒவ்வொரு தீர்மானத்தையும் கொண்டுவருகிற மாதிரியைப் பார்த் தால் நீங்கள் மனதில் நினைப்பது ஒன்று, இங்கே நடப்பது ஒன்று, செய்வது இன் னொன்று. இப்படியிருக்கிறதே ஒழிய நல்ல மனப்பான்மை உங்களிடம் இருப்ப தாக எனக்குத் தெரியவில்லை. நீங்கள் நல்ல மனப்பான்மையோடு இருப்பீர்களே யானால், இன்று செங்கோட்டை பூமிசாஸ்திரத்தைப் படித்துப் பாருங்கள். அதை கண்டு படித்து இருப்பீர்களேயானால், அஞ்சுதெங்கு, தங்கச்சேரி, Fort Cochin, இவை கள் உடனே இந்த கொச்சி திருவிதாங்கூர் ஐக்ய சமஸ்தானத்தோடு சேரவேண்டு மென்று நீங்கள் நினைக்கின்றீர்களேயானால், செங்கோட்டையை இந்த நிமிடமே இங்கிருந்து பிரித்து விட நீங்கள் பிரயாசைப்பட வேண்டும். இல்லையேல் நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த தீர்மானத்திற்கு என்ன அடிப்படை இருக்கின்றது என்று நான் கேட்கிறேன். ஆனால் இந்த சூழ்நிலையில் இது எப்படி இருப்பதாக எனக்குப் படுகிறது என்று கேட்டால், இது ஏகதேசம் ஒரு பிடித்துப் பறிக்கிறது மாதிரி, பிடிபறி மாதிரி இருக்கின்றது. ஆனால் இது எவ்வளவு காலத்திற்கு, யாரு டைய காலம் வரை, எப்பொழுது வரை, எவ்வளவு காலம் வரை, இது நடக்குமென் றும் எனக்கு நன்கு தெரியும். ஒரு வேளை டி. கெ. நாராயணபிள்ளை அவர்கள் நினைக்கலாம், நான் எதையும் சாதித்து விடுவேனென்று. ஆனால் காலம் நீங்கள் நினைப் பதுபோல் இருக்காது என்று நான் திட்டவட்டமாக இந்த இடத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த Enclaves என்று சொன்னது, கழிந்த காலத்தில், எந்த சந்தர்ப்பங்களில், எது நிலவில் இருந்தபோது வந்தது என்பதை நீங்கள் சரித்திர பூர்வமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் படித்து அறிந்திருப்பீர்கள். ஐக்ய கேரளம் வரும். அது ஆகாயத்திலிருந்து அப்படியே அத்துவிழும். நமக்கு உடனே அதைப் பிடித்துக்கொள்ளலாம் என்றும் அந்த இடத் தில் அஞ்சுதெங்கையும், Fort Cochin–யையும் அதில் சேர்த்துக்கொள்ளலாமென்றும் நீங்கள் நினைக்கிறீர்கள். உங்கள் மலையாள மந்திரி, Madras Cabinet–ல் இருக்கும் மாதவமேனன் என்ன சொன்னார் என்று உங்களுக்கும், எங்களுக்கும், தெரியும். ஐக்ய கேரளம் இன்னும் 10 வருடத்திற்கு முன் உருவாகப் போகிறதில்லை என்று தான் அவர் சொல்லி இருக்கிறார். அது மாத்திரமா? உங்கள் கட்சியினிடையே இருக்கும் பின்னல்கள் எங்களுக்கும் தெரியும். ஒருவர் சொல்கிறார். ஒரு ராஜபிர முக் கொண்ட ஒரு ஐக்ய கேரளம் போதுமென்று, இன்னொருவர் சொல்கிறார், ராஜபிரமுக் இல்லாத ஒரு ஐக்ய கேரளம் போதுமென்று. மூன்றுவது மனிதர் ஒருவர் சொல்கிறார் இரண்டுமில்லாத ஒரு ஐக்ய கேரளம் வரவேண்டுமென்று. உங்க ளுக்கு இந்தமாகாணத்தைப் பொறுத்தவரையில் என்ன ஒற்றுமை வரப்போகிறதென் றுநான் கேட்கிறேன்? மாதவமேனன் சொன்னார், ஐக்ய கேரளம் இன்னும் ஒரு 10 வருடத்திற்கு முன்பு உருவாகப் போவதில்லையென்று. ஆனால் நான் நினைக்கி றேன், ஐக்ய கேரளம் இந்த ஜன்மத்தில் வரப்போவதில்லை யென்று. அர்ச்சுனன் பாஸ்து பாஸ்திரம் பெற 14 வருடங்கள் கடுந்தவம் செய்தான். செய்து, பாஸ்து பாஸ்திரம் பெற்றான். ஆனால் டி. கெ. நாராயணபிள்ளை அவர்கள் ஊசியை நாட்டி, அதற்கு மேல் தலை கீழாய் நின்று தவம் செய்தாலும், உங்களுக்கு ஐக்ய கேரளம் கிடைக்கப்போவதில்லை. ஒருவேளை அப்படி வந்து விட்டாலும் என்ன நடக்கப்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

போகிறதென்று நான் சொல்கிறேன். பட்டினியும், பசியும், பொருளாதாரமும் இல்லாத ஒரு மாகாணம், சித்தூரும் தமிழ்நாடும் இல்லாத ஒரு மாகாணம்தான், உங்களுக்கு கிடைக்கும். அதை நீங்கள் மறந்து விடக் கூடாது. அப்படி சித்தூரும், நாஞ்சில் நாடும் இல்லாத ஒரு மாகாணமாய் இருக்கும்போது அதில் என்ன இருக்க முடியும். பஞ்சம், பட்டினி, கொலை, கொள்ளை, இராக்கொள்ளை, பகல் கொள்ளை, தீவைப்பு இவைகளுக்கு மேல் நோய், இவைகள் தான் அங்கு இருக்க முடியும். உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு மாகாணம் கிடைக்குமே ஒழிய நீங்கள் கனவு காண்கிற முறையில் ஒரு மாகாணம் உங்களுக்கு கிடைக்குமென்று நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு.

ஸ்ரீ. ஆர். கே. ராம்: திருவிதாங்கூர் தமிழ்நாடு உள்படாத ஒரு ஐக்கிய கேரளம் வேண்டாமென்று பிரதான மந்திரி அவர்கள் சொன்னது மெம்பர் அவர்களுக்குத் தெரியுமா?

ஸ்ரீ. ஏ. சிதம்பரநாத நாடார்: தெரியும். அவர்கள் நினைக்கலாம், தமிழ்நாட்டை விட்டுவிட்டால், அவர்களது காரியம் வெள்ளத்திலாய் விடுமென்று. இந்த நிலையில், நான் காணு அவர்களைக் கேட்கிறேன், அவர்கள் தினந்தோறும் ஆங்கில, மலையாளப் பத்திரிகைகளை ஒழுங்காகப் படித்துக்கொண்டிருக்கிறார்களாயென்று. அஞ்சுதெங்கு மக்கள் இங்கே வரத் தயாராயிருக்கின்றார்களா? தங்கச்சேரி மக்கள் இங்கே வரத் தயாராய் இருக்கின்றார்களா என்று நான் கேட்கிறேன், நானு அவர்களிடம். அவர்கள் இங்கு வரத்தயாராயில்லை. அவர்களுக்குத்தெரியும் இங்கே நடக்கும் நாடகம். இங்கே பகல் கொள்ளை நடக்கிறதென்று அவர்களுக்குத் தெரியும். இங்கே நியாயம் நடக்கவில்லை யென்று அவர்களுக்குத் தெரியும். இங்கே அநியாயம் நடக்கிறதென்றும் அவர்களுக்குத் தெரியும். நீங்கள் வா! வா! என்று சொன்னால் அவர்கள் இங்கு வாப்போவதில்லை. ஆதலால் நீங்கள் அதற்குப் பிரயாசைப்பட வேண்டாமென்று சொல்லிக் கொண்டு நான் இந்த பிரமேயத்தை எதிர்க்கிறேன்.

ശ്രീ. പി. നാണു: പാണ്ഡ്യരാജാവിൻെറ കാലത്തു് പശ്ചിമപർവതത്തിനപ്പുറത്തു പോയവർ പിന്നെ എന്തിനാണ് ഇങ്ങോട്ട പോന്നതു്?

ஸ்ரீ. ஏ. சிதம்பரநாத நாடார்: நான் சொல்லித் தருகிறேன். கேளுங்கள். நமது நடராஜபிள்ளை அவர்களின் தகப்பனார் Professor. சுந்தரம் பிள்ளை ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதில், கன்னடமும், கழிதெலுங்கும், கவின் மலையாளமும் உன் உதிரத்தில் பிறந்ததடி என்று. மலையாளிகள் ஆகாயத்திலிருந்து இறங்கி வரவில்லை. தமிழனின் உதிரத்திலிருந்துதான் வந்தான். பண்டைக்காலத்தில், மலயாளிகள் என்று ஒருவன் கூட இருந்தது கிடையாது. அன்று பரசுராமன் என்ன செய்தான்? பூமியைப் பிராமணர்களுக்குத் தான் தானமாய் கொடுத்தான். ஆகவே மலையாளி என்று ஒருவன் இங்கே வந்ததில்லை. வேறொரு ஜாதியாரும் இங்கே வந்து விடவில்லையென்று மெம்பருக்குத் தெரியாவிட்டால் நான் சொல்லித் தருகிறேன்.

ஸ்ரீ. ஸ்ரீ. வி. தாஸ்: ஸர், நான் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். இந்த அசெம்பிளியிலே இந்தத் தீர்மானம் வருவதற்கு ஒரு காரணம், கொச்சி திருவிதாங்கூர் Covenant லே ஒரு செக்ஷன் இருக்கிறது. அந்த செக்ஷன்படி கொச்சி திருவிதாங்கூர் யூனியன் அரசாங்கத்தோடு பக்கத்திலுள்ள இந்திய யூனியன் பிரதேசத்திலிருந்து ஏதாவது ஒரு பிரதேசத்தை இதோடு சேர்த்துக்கொள்ளலாம். அந்த கொச்சி திருவிதாங்கூர் உடன்படிக்கையில் குறிப்பிட்டிருப்பதற்கு இணங்கி நமது பொதுமானப் பட்ட மெம்பர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இங்கு கொண்டுவந்து, அசெம்பிளியுடைய தீர்மானப் பிரகாரம் அஞ்சுதெங்கு, தங்கச்சேரி, Fort Cochin இவைகளை, இந்த ஐக்கிய சமஸ்தானத்தோடு சேர்க்கவேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் ஒரு கோரிக்கையை சமர்ப்பித்தால் அதை நடப்பில் கொண்டுவர முடியும், என்ற முறையில் தான் நமது மெம்பர் அவர்கள் இத் தீர்மானத்தை இங்கு பிரேரே

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sri V. Das]

பித்து இருக்கின்றார்கள். இந்தத் தீர்மானத்தை பிரேரேபிப்பதற்கு முன்னால் சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்பு இந்தத் திட்டுப் பிரதேசங்கள் சம்பந்தமாக சென்னை அரசாங்கமும் கொச்சி திருவிதாங்கூர் அரசாங்கமும் இன்னும் மைசூர் சமஸ்தான அரசாங்கமும் ஹைதராபாத் அரசாங்கமும் மத்திய அரசாங்கத்தினிடம் தங்களுடைய கோரிக்கைகளை சமர்ப்பித்தன. அந்த கோரிக்கைகளை மத்திய அரசாங்கம் சரியான படி பரிசீலனை செய்து ஒரு தீர்மானத்திற்கு எத்திச் சேர்ந்திருக்கின்றார்கள், அதாவது ஒரு கொள்கையளவில். அந்தக் கொள்கைப்பிரகாரம், நாம் பத்திரிகைகளில் பார்க்கின்றபொழுது மைசூரில் உள்ள சென்னைப் பிரதேசங்கள் 39 ஆயிரம் ஏக்கர்களை கொடுத்துவிட்டு, ஒன்பதினாயிரம் ஏக்கர் பிரதேசங்கள் சென்னை மாகாணத்தில் இருந்து மைசூருக்கு கொடுக்கப்பட்டிருப்பதாகவும், ஹைதராபாத்தில் சென்னை மாகாணத்திற்கு சொந்தமாய் இருக்கக்கூடிய இருப்தையாயிரம் ஏக்கர் பிரதேசங்களை சென்னை மாகாணத்திற்குக் கொடுத்துவிட்டு அதே சந்தர்ப்பத்தில் சென்னை மாகாணத்தில் ஹைதராபாத்திற்கு சொந்தமாய் இருக்கக்கூடிய 40 ஆயிரம் ஏக்கர் பிரதேசங்களை சென்னை மாகாணத்திலிருந்து கொடுக்கும்படியாகவும் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கின்றார்கள் என்று பத்திரிகை வாயிலாக அறிய முடிகின்றது. இதிலிருந்து தெரிகிறது, இந்திய சர்க்கார் ஒரு கொள்கையை பலமாக வற்புறுத்தி இருக்கின்றதென்று. ஒரு பிரதேசத்தில் இருக்கக்கூடிய திட்டுப் பிரதேசங்கள், இன்னொரு பிரதேசத்திற்கு சொந்தமாய் இருக்கக்கூடிய பிரதேசத்துடன் ஒட்டிக் கிடக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் அந்தப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய திட்டுப் பிரதேசங்களை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கை இந்திய அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த ஒப்பந்தத்தின்படி கவர்னர் ஜெனரல் 26ந் தேதிக்கு முன்னால் ஒரு, Order in Council பாஸாக்கவேண்டும். அதன்படி இந்தத் திட்டுப் பிரதேசங்களை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் சொல்கிறது. அதே சமயத்தில் கொச்சி திருவிதாங்கூர் ஐக்கிய சமஸ்தானத்தில் இருக்கக்கூடிய திட்டுப் பிரதேசங்களைப் பொறுத்த அளவில், சென்னை அரசாங்கமும் இந்த அரசாங்கமும் கலந்து ஆலோசிப்பதாகவும், அதற்கு இங்கிருந்து பிரதிநிதியாகச் சென்ற நமது சீப் லெக்ரெட்டரி அவர்கள் அங்கிருந்து திரும்பி வருகிறபொழுது யாரோ ஒருவர் அவரிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார், 'உங்கள் பேச்சுவார்த்தைகள் எப்படி நடந்ததென்று'. அஞ்சுதெங்கு, தங்கச்சேரி, பிரிட்டிஷ் கொச்சின் இவைகளுக்குப் பதிலாக சென்னை அரசாங்கம் சித்தூரையும் செங்கோட்டையையும் கேட்டதா? என்று ஒரு பத்திரிகை நிருபர் அவரிடம் கேட்டபொழுது, சீப் லெக்ரெட்டரி அவர்கள் இங்கிருந்து கொடுப்பதற்கு என்ற விஷயத்தைப் பற்றி நான் பேசவில்லை. அங்கிருந்து வாங்கவே சென்றேன் என்று சொன்னார்களாம். அதே சந்தர்ப்பத்தில்தான் இந்திய அரசாங்கம் கைக்கொண்டிருக்கக் கூடிய மைசூர், ஹைதராபாத், சென்னை மாகாணம் இவைகள் சம்பந்தப்பட்டவரையில் இந்திய அரசாங்கம் என்ன முறையில்தங்கள் கொள்கைகளை ஸ்திரப்படுத்தியிருக்கிறதோ அதேபடி கொச்சி திருவிதாங்கூர் ஐக்கிய சமஸ்தானத்தோடு இன்னொரு மாகாணத்திலிருக்கும் பிரதேசங்களை சேர்க்கவேண்டுமென்று அந்த நியாயத்தின் அடிப்படையின் பேரில், இந்த ஐக்கிய சமஸ்தானத்திலுள் இருக்கும், அவர்களுடைய பிரதேசங்களை அவர்களிடம் கொடுக்க வேண்டியது, ஒரு நியாயமாகும். அதைத் தான் திருவாளர் ஈஸ்வரமேனன் அவர்கள் அழகாக எடுத்துக் கேட்டார்கள், அவர்களுக்கு சொந்தமாயிருக்கும் திட்டுப் பிரதேசங்களை நாம் அவர்களிடம் கொடுக்க வேண்டாமாயென்று? அதனுடைய அபிப்பிராயம் என்ன வென்று கேட்டால் அஞ்சுதெங்கையும், தங்கச்சேரியையும் அவர்கள் நமக்கு கொடுக்கும்போது, சித்தூரை நாம் அவர்களுக்கு விட்டுக்கொடுக்கவேண்டுமென்று அவர்கள் கூறுகிறார்கள். சித்தூரில், அங்குள்ள மக்கள் என்னென்ன முறையில் கஷ்டப்படுகிறார்கள் என்று நமக்கும், நமது அரசாங்கத்திற்கும் தெரியும். அங்கே உப்பு எவ்வளவு உயந்த விலையில் விற்கப்படுகிறது என்பது இந்த அசெம்பளியில் விவாதிக்கப்பட்டதொரு விஷயம். ஆகவே மேற்சொன்ன காரணங்களால், மதராஸ் மாகா

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

ணத்திற்கு சொந்தமான திட்டுப் பிரதேசங்களை மதராஸ் மாகாணத்திற்கு கொடுக்க வேண்டியது ஒரு நியாயமாகும். அடுத்தபடியாக இதற்கு முன் திருவிதாங்கூரையும் கொச்சியையும் இணைப்பதற்கு முன்பாக கொச்சிக்கு சொந்தமாய் உள்ள பல திட்டுப் பிரதேசங்கள் இங்கு இருந்தன. திருவிதாங்கூருக்கு சொந்தமான பல திட்டுப் பிரதேசங்கள் கொச்சியிலும் இருந்தன. இவைகள் இரண்டும் இணைந்து விட்டதால் இந்தத் திட்டுப் பிரதேசங்கள் சம்பந்தமான விஷயங்கள் விவாதத்திற்கு இடமாகவில்லை. எனென்றால் இரண்டு சமஸ்தானங்களும் ஒன்றாகி விட்டது. நமது Chief Minister அவர்கள் கூறுவது போல் "സ്വതന്ത്രവും സുശക്തവുമായ ഒരു ഐക്യഭാരതം" என்ற அந்த பாரதம் நமக்கு வரவேண்டுமென்றால், இந்த திருவிதாங்கூரும், கொச்சியும் இந்தியா கண்டத்தின் ஒரு திட்டுப் பிரதேசம் என்று தான் சொல்ல முடியும். ஆகவே எந்தக் காரணங்களால் அஞ்சுதெங்கையும் தங்கச்சேரியையும் இந்த ஐக்கிய சமஸ்தானத்தோடு இணைக்க வேண்டுமென்று நாம் கூறுகிறோமோ, அதே படி இந்தத் திட்டுப் பிரதேசங்களாய் இருக்கக் கூடிய திருவிதாங்கூரையும் கொச்சியையும் மதராஸ் மாகாணத்தோடு இணைத்து ஒரு സ്വതന്ത്രവും സുശക്തവുമായ ഒരു ഐക്യഭാരതം உண்டாக்க நீங்கள் சமைக்க வேண்டும். காணு அவர்கள் பேசும்போது அவர்கள் ஏதோ அஞ்சுதெங்கு ஆற்றிங்கல் ராணி அவர்களுக்கு சொந்தமாயிருந்ததாகவும், சரித்திர அடிப்படையில் பார்த்தாலும் அஞ்சுதெங்கும், தங்கச்சேரியும் கண்டிப்பாக இந்த ஐக்கிய சமஸ்தானத்தோடு தான் சேரவேண்டுமென்றும் சொன்னார்கள். ஸர், கொச்சியில் இருக்கக்கூடிய சித்தூரின் கதையைப் பார்த்தால், அதன் சரித்திரத்தைப் பார்த்தால்; கொங்கு நாட்டு மன்னன் பாலக்காடு ராஜாவின் பிரதேசத்தை ஆக்கிரமித்தபோது கொச்சி மன்னன் அந்த பாலக்காடு ராஜாவிற்கு துணையாய் சென்று, கொங்கு நாட்டுப் படையை முறி அடித்ததால், அதற்காக அந்த பாலக்காடு மஹாராஜா இந்த சித்தூர் தாலுகாவை கொச்சி ராஜாவிற்கு சன்மானமாய் அளித்து இருக்கின்றார்கள். கொச்சி ராஜா இந்தப் பிரதேசத்தை வாங்கும்போது செய்து கொண்ட உடன்படிக்கை என்னவென்றால் இதர தேசத்தினர், இதர நாட்டு மன்னர்கள் யாராவது படை எடுக்கும்போது பாலக்காடு ராஜாவை நான் பாதுகாத்துக் கொள்வேன் என்ற உடன்படிக்கைப்படி சித்தூர் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த ஹைதராலி, திப்பு இவர்களின் படையெடுப்பின்போது இந்த ராஜாவினுடைய பிரதேசங்கள் முழுவதுமே சென்னையோடு போய்விட்டது. ஆகவே அந்த ஒப்பந்தமும் முறிந்து விட்டது. அதனால் இந்த சித்தூரை கண்டிப்பாக சென்னை மாகாணத்தோடுதான் சேர்க்க வேண்டும். சரித்திர அடிப்படையில் பார்த்தாலும், இப்பொழுது இருக்கக் கூடிய உண்மையை எடுத்துப்பார்த்தாலும், அந்த கிழக்கு பாகத்திலிருக்கும் சித்தூர் முதலிய இடங்கள் 108 சதுரமைல்கள் விஸ்தீரணமுள்ள அந்த பாகத்தில் மிக்கவாறும், 60%–ம் தமிழர்கள்தான் அங்கு வாழ்கிறார்கள், என்று Cochin States Manual–ல் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே சித்தூர் சரித்திர அடிப்படையிலானாலும், அங்குள்ள மக்களின் அபிப்பிராயத்தினாலும், அவர்களுக்கு சௌகரியமாய் இருப்பதினாலும், அது கண்டிப்பாக சென்னை மாகாணத்தோடுதான் சேரவேண்டும். அதேபடியாக செங்கோட்டைத் தாலுகாவில் இருக்கிற இலத்தூர் பிரதேசம் மதராஸ் மாகாணத்தால் சூழப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரதேசம் முதல் கன்னியாகுமரி பிரதேசம் வரை புறத்தாய நாடு என்று சரித்தரம் கூறுகிறது. அதாவது, மண்கோட்டைக்கு கிழ் பக்கம் இருக்கும் நாடு. அந்தப் பிரதேசம் திருவிதாங்கூர் அரசரிடம் எப்படி வந்தது என்று கேட்டால், Arcot Nawab–யிட்மிருந்து ஆண்டிற்கு 1 லக்ஷம் வெள்ளிக் காசுக்கு பாட்டமாக East India company மூலம் பாட்டமாக எடுத்தார்கள். பின் அந்தப் பாட்டமும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இன்றைக்கு சென்னை அரசாங்கம் இந்த புறத்தாய நாட்டின் பாட்டத்தைக் கேட்டால் இந்த ஐக்கிய சமஸ்தானத்தின் வரவு கூட அந்த பாட்ட த்தொகைக்கு சமமாக வராது. இந்த சமஸ்தானத்தையே ஜப்தி பண்ண வேண்டி வரும். ஆகவே நான் முடிவாக சொல்வதென்னவென்றால், இந்தத் தீர்மானப்பிரகாரம், அஞ்சுதெங்கு, தங்கச்சேரி, Fort Cochin இம்மாதிரிப்பட்ட பிரதேசங்கள் எல்லாம் கண்டிப்பாக கொச்சி திருவிதாங்கூர் யூனியனிடம் தான் இருக்கவேண்

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly

[Sri. Sri. V. Das]

டும். ஆனல் அப்படி எடுக்கும்போது அங்குள்ள மக்களினுடைய அபிப்பிராயத்தை யும் கேட்டுக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமை. அங்ஙனம், அது அரசாங்கத்தின் முதல் கடமை என்று உத்தேசித்து சென்னை அரசாங்கத்திலிருக்கும், சங்கரநாராயண ஐயர் அவர்களும், Tinnevelly D. S. P. ம், Collector-ம் அங்கு போய், அங்குள்ள மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்க, அவர்கள் நாங்கள் சென்னை யோடு தான் இருப்போம் என்று சொன்னதாக Hindu-ல் வந்த செய்தி ஒன்று கூறு கிறது.

The House adjourned at 4-30 p. m. to meet again at 11 a. m. on the 23rd January 1950.

V. KRISHNAMOORTHI AIYAR,
Secretary to the Legislative Assembly.

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly